**தம்புள்ளை மாநகர சபையி - 2024**

**-----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தம்புள்ளை மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தம்புள்ளை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம்

கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அவசர அத்தியவசியமான பொது அபிவிருத்தித் திட்டங்கள் செயற்பாட்டிற்காக மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திடம் பெறப்பட வேண்டிய ரூபா 1,643,899 கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | 2025 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தீயணைப்பு வண்டி மற்றும் ஜீப் வண்டியின் பெறுமதிகள் அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு பெறுமதியை வழங்கியதன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதாக. | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 1995 ஆம் ஆண்டின் போது தம்புள்ள மொத்த வியாபார சந்தை நிர்மாணத்திற்காக உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 26,164,995 ஆன கடன் மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2025 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் 02 CCTV கெமரா முறைமைகள் இரண்டு கொள்வனவு மற்றும் சினிமா கொட்டகைகளின் திருத்தங்களுக்காக செலவிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா 1,000,737 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | செலவினங்களை மூலதனம் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேதன பசளை இருப்பின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 3,362,500 ஆன சேதன பசளை இருப்பு மீளாய்வாண்டின் பெறுமதியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | இருப்பின் பெறுமதி இனங்காணப்பட்டு தேவையான சீராக்கங்களைச் செய்து கொள்வதாக. | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட நிலையான சொத்துக் கணக்கின் மீதி ரூபா .956,786,131ஆக இருந்த போதும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமான பங்களிப்பு கணக்கு ரூபா 961,145,410 ஆக இருந்த காரணத்தினால் ரூபா 4,359,278 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்டது. | சீர் செய்வதற்காக தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதாக. | கணக்கு மீறிகள் சீராக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா. 38,598,616 ஆகவிருந்த 04 சொத்து விடயங்கள் தொடர்பான பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் கோவைகள என்பவற்றை கண்டுபிடித்து சீராக்குவதற்கும் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகளுக்கு பொருத்தமான பதிவேடுகள், பட்டோலைகள் மற்றும் கோவைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பதில் கடமை படிகள் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர் ஒருவருக்கு பதில் கடமை சம்பளத்திற்கு மேலதிகமாக இணைந்த படிகள் செலுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத இருக்கையில் தம்புள்ள மாநகர சபையின் பதில் கடமை கணக்காளருக்கு அந்த அலுவலகத்திற்கு செல்வதற்காக 2023 டிசம்பர் முதல் 2024 ஜூன் வரையான காலப் பகுதியில் ரூபா 42,000 இணைந்த படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இணைந்த படிகள் செலுத்தப்பட்டுள்ளதாக. | செலுத்தப்பட்ட இணைந்த படிகள் மீள அறவிடப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **பாராளுமன்ற சட்டங்கள்** | | | |
| | 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு | வீதவரி ஆதனங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையில் பயன்படுத்தி மீளாய்வாண்டின் போதும் வீதவரி அறவிடப் பட்டிருந்தது. | வீதவரி மதிப்பீட்டு மீளமைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | வரி மீள் மதிப்பீடு மேற் கொள்ளப்பட்டு வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணங்கள் கோவை** | | | |
| (i) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நி.பி 371 (2) (ஆ) | 04 ஆண்டுகளுக்கு மேலாக காலம் கடந்துள்ள ரூபா 2,894,177 ஆன 03 முற்பணங்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் அறிவுறுத்தலின் பேரில் முற்பணங்களைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் என்பதாக. | முற்பணங்களை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி 571(3) | 2022 முதல் 2024 வரையிலான காலப் பகுதிக்குரிய காலாவதியான ரூபா 840,426 ஆன 26 வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | காலாவதியான வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நி.பி 507 மற்றும் நி.பி 756 | 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதாக. | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட வேண்டும். |
| (iv) | நி.பி 1646 | மாநகர சபையின் 35 வாகனங்களில் ஓட்டக் குறிப்புகள் 03 மாதங்கள் முதல் 05 ஆண்டுகள் | சாரதிகளின் பற்றாக்குறையின் பேரில் அடிப்படையில் பதில் சாரதிகள் | ஓட்டக் குறிப்புகளை மாதாந்தம் |

| | | |
|---|---|---|
| வரையான காலப் பகுதியில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஈடுபடுத்தமை காரணமாக ஓட்டக் குறிப்புகளை சமர்ப்பிக்க முடியாமல் இருந்ததாக. | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,223,502 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 66,694,541 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மாநகர ஆணையாளரால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், படடியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமானம் மூலம்** | **மதிப்பிடப் பட்ட வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| (i) | வீதவரியும் வரியும் | 23,700,000 | 43,987,664 | 30,688,141 | 19,411,973 | 44,950,000 | 25,913,498 | 33,244,487 | 6,112,450 |
| (ii) | வாடகை | 26,859,400 | 31,695,462 | 31,791,054 | 17,102,156 | 23,332,620 | 27,037,346 | 29,482,951 | 17,197,748 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 9,780,000 | 9,800,951 | 9,805,951 | 1,768,036 | 33,495,000 | 9,711,744 | 10,211,549 | 1,773,036 |
| (iv) | ஏனைய வருமானம் | 51,732,000 | 74,848,966 | 81,770,951 | 35,859,068 | 56,825,000 | 102,874,425 | 74,902,274 | 42,781,053 |
| | மொத்தம் | 112,071,400 | 160,333,043 | 154,056,097 | 74,141,233 | 158,602,620 | 165,537,013 | 147,841,261 | 67,864,287 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி மற்றும் வரி** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று நிலுவை வீதவரி மீதி ரூபா. 4,775,263 ஆகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா. 10,000 இற்கு மேற்பட்ட நிலுவை மீதிகளுடன் கூடிய 66 வீதவரி அலகுகளிலிருந்து ரூபா 1,473,193 தொகையை மாநகர சபைச் சட்டத்தின் 247 (ஆ) (4) பிரிவின் பிரகாரம் செயற்பட்டு நிலுவை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களைத் தடை செய்து நிலுவையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 106 அரச நிறுவனங்களில் இருந்து ரூபா 673,826 தொகையான நிலுவை வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகை தொடர்பாக தொடர்புடைய நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப் பட்டுள்ளதாக. | - மேற்படி - |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா. 7,048,926 ஆன நிலுவை கடை வாடகை வருமானம் ஒன்றும் ரூபா 6,074,222 ஆன நிலுவை கடை கேள்வி வாடகை வருமானமொன்றும் காணப்பட்டதுடன் அதில் 102 கடைகளில் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட ரூபா 4,261,645 ஆன நிலுவை கடை வாடகையொன்றும் 24 கடைகளிலிருந்து ரூபா 100,000 இற்கு மேற்பட்ட ரூபா 6,354,687 ஆன நிலுவை கடை கேள்வி வாடகை வருமானமொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கு கடை உரிமையாளர்கள் விருப்பமின்மையால் நிலுவை ஏற்பட்டதாகவும் கேள்வி கட்டணங்களை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பகாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட 02 ஹொட்டெல் களிலிருந்து வியாபார வரியாக ரூபா. 1,197,786 ஆன நிலுவையெயான்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 1,194,725 தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்து 2022 வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை மீதியொன்றாக இருந்தது. | நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பப்ட்டுள்ளதாக. | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்த்த நன்மைகளை அடையத் தவறுதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 ஆம் ஆண்டு ரூபா. 1,221,450 செலவில் கட்டப்பட்ட திகம்பதஹ கழிவு முகாமைத்துவ நிலையத்தில் 72 மின் விளக்கு கம்பங்களைக் கொண்ட வீதி விளக்கு அமைப்பு காட்டு யானைகளால் சேதமாக்கப்படட்டிருந்த போதிலும், அதை புனரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வர எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | பழுதடைந்த விளக்குகளை மீண்டும் பொருத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | மின் விளக்கு அமைப்பை புதுப்பித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும். |
| (ii) | திகம்பதஹ கழிவு முகாமைத்துவ நிலையத்தில் உக்காத கழிவுகளை எரிப்பதற்காக 2020 ஆம் ஆண்டு ரூபா. 20,972,104 செலவில் நிர்மாணிக்கப்பட்ட வெப்ப எரியூட்டி செயல்படவில்லை, மேலும் உக்காத கழிவுகளை திறந்தவெளியில் எரிப்பதால் தொடர்புடைய இயந்திரத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் கிடைக்கவில்லை. | மலிவான எரிபொருளைப் பயன்படுத்தி அதை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | கழிவு எரியூட்டியை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும். |
| (iii) | கவாஷிமா உரத் திட்டம் தொடங்கப்பட்டு 06 ஆண்டுகளுக்கும் மேல் கடந்து விட்ட போதிலும், உற்பத்தி செய்யப்படும் உரம் தேவையான தரத்தில் இல்லை, மேலும் முறையான சந்தைப்படுத்தல் திட்டமொன்றும் உருவாக்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக, மீளாய்வவாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 223,932 கிலோகிராம் சேதன உரத்தை விற்பனை செய்ய முடியாமல் இருந்தது. | 2025 ஆம் ஆண்டில் உர விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்தாக. | உர விற்பனைக்கு முறையான முறைகள் உருவாக்கப்பட வேண்டும். |

**(ஆ) பொதுமக்கள் சுகாதாரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் (2017 ஆகஸ்ட் | எரியூட்டி செயல்பாட்டுக்கு வந்த பிறகு, உக்காத கழிவுகள் | எரியூட்டியை செயற்பாட்டுக்கு |

| | | |
|---|---|---|
| 30 ஆந் திகதிய L.D.B.4/8/(XII) ஆல் திருத்தப்பட்டது) படி, பிளாஸ்டிக் அல்லது பிற எளிதில் தீப்பிடிக்கக்கூடிய பொருட்களைக் கொண்ட குப்பைகளை திறந்த வெளியில் எரிப்பது, எரிக்க காரணமாக இருப்பது, இடமளிப்பது அல்லது அனுமதிப்பது குற்றமாக இருந்த போதிலும், மாநகர சபை உக்காத கழிவுகளை திறந்தவெளியில் எரித்துள்ளது. | எரியூட்டிக்கு அனுப்பப்படும் என்பதாக. | எடுத்து உக்காத பொருட்களை எரிக்க பயன்படுத்த வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின் களஞ்சியம் நிர்மாண மற்றும் வாகன களஞ்சியத்தில் காணப்பட்ட 30 இருப்பு அலகுகளுக்குரிய 335 பொருட்கள் இருப்புப் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொருட் கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டு பதிவேடு களுக்கு உட்படுத்தவும் பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத பொருட்களை வெளியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | பொருட்களை இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 - 2022 காலப்பகுதியில் சபையில் இடம்பெற்ற 02 விபத்துக்கள் தொடர்பாக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 104(4) பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் 04 தரப்பினருக்குரிய ரூபா 147,427 ஆன நட்டத்தை அறவிடுமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் அறவிடப்பட்டோ அல்லது சட்ட ரீதியான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | நட்டத்தை அறளவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பரிசோதனை அறிக்கையின் பரிந்துரை பிரகாரம் நட்டத்தை அறவிட வேண்டும். |
| (இ) | 03 வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.பி 104(3) இன் பிரகாரம் ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அவ் விபத்துகளுக்காக தேவையான எதிர்வரும் நடவடிக்கைகள் அல்லது முறையான பரிசோதனைகள் இடம்பெற்றிருக்கவில்லை. | நி.பி 104(4) இன் பிரகாரம் ஆரம்ப பரிசோதனை விரைவில் மேற்கொள்ளப்படுவதாக. | பரிசோதனைகளை விரைவில் மேற் கொண்டு பொறுப்பான தரப்பினரிடமிருந்து நட்டங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 மார்ச் 19 ஆந் திகதி முதல் உறுப்புரிமை காலம் முடிவடைந்த பின்னர் மாநகர மேயர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 256,800 பெறுமதியான 02 இருப்பு பொருட்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 02 பொருளிருப்பு பொருட்கள் மீண்டும் கையளிக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக நி.பி 104(3) ஆரம்ப பரிசோதனை ஒன்றினை | நி.பி 104(4) இன் பிரகாரம் பரிசோதனை விரைவில் மேற்கொள்ளப்படுவதாக. | பரிசோதனைகளை விரைவில் மேற் கொண்டு பொறுப்பான தரப்பினரிடமிருந்து நட்டங்கள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்வதற்கு சபையொன்று 2024 பெப்ரவரி 02 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்த போதும் மீனாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தம்புள்ள பஸ் நிறுத்துமிடத்தின் 09 கடை அறைகள் குத்தகையாளர்களால் மாதாந்தம் ரூபா 10,000 முதல் ரூபா 50,000 வரை பெறுமதியில் உப குத்தகைக்கு வழங்கப் பட்டிருந்ததுடன் 03 கடைகள் குத்தகையாளர் களால் அற்றோனி அனுமதிப் பத்திரத்தின் மூலம் உப குத்தகையாளர்களுக்கு கையளிக்கப்பட்டு இருந்தது. | உப குத்தகை குழுவொன்று நியமிக்கப்பட்டு பரிசோதனையொன்று. | கடைகள் உப குத்தகைக்கு வழங்குவதற்கு உரிய சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

### 3.4 விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட மொத்தம் ரூபா 82,280,986 ஆன 18 சொத்து உருப்படிகள் மற்றும் பெஞமதி இனங்கானப்படாத 02 வாகனங்கள் 02 ஆண்டுகள் முதல் 03 ஆண்டுகள் வரையான காலமாக விளைவற்று காணப்பட்டன. | சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் வாகனங்களுக்காக சாரதிகள் இன்மையால் பயன்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளதாகவும். | சொத்துக்களை விளைவற்ற வகையில் வைத்திருப்பதற்கு இடமளிக்காமல் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 22 (1) பிரிவின் பிரகாரம் சமூக மற்றும் களியாட்ட நடவடிக்கைகளுக்காக சபைக்கு கையேற் கப்பட்ட 15 காணிகள் நோக்கத்துக்கு உட்படுத்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் 03 ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரை விளைவற்ற வகையில் காணப்பட்டது. | சொத்துக்களை நோக்கத்துக்கு உட்படுத்தப் பட்ட செயற் பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்களை நோக்கத்துக்கு உட்படுத்தப்பட்ட செயற்பாடு களுக்கு பயன்படுத்த வேண்டும்.. |
| (இ) | தம்புள்ள மாநகர சபையால் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் நிதி ஏற்பாட்டின் பேரில் திகம்பதஹா நிர்வாக கட்டிடத்தில் ரூபா 27,689,240 ஆன கிரயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டின் போது திறந்து வைக்கப்பட்டிருந்த போதும் 2024 திசெம்பர் 31 ஆம் தேதி வரை எதிர்ப்பார்த்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் | காணியை கையேற்பதற்கும் போதியளவு ஊழியர்களை ஈடுபடுத்தியதன் பின்னர் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகவும். | சொத்துக்களை நோக்கத்துக்கு உட்படுத்தப்பட்ட செயற்பாடு களுக்கு பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளைவற்ற வகையில் அழிவடைவதற்கு இடம் அளிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | திகம்பதாஹ கழிவு முகாமைத்துவ நிலையத்தில் மொத்தம் ரூபா. 909,225 செலவில் 2021 ஆம் ஆண்டில் மணிக்கு 3000 லீட்டர் நீர் கொள்ளளவைப் பெறும் நோக்கில், கட்டப்பட்ட குழாய் கிணறு பயன்படுத்தப்படாமல் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | மின் வேலி பழுதுபார்க்கப் பட்ட பிறகு குழாய் கிணற்றை பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | தொடர்புடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு சொத்துக்களை செயற்திறனாகப் பயன்படுத்த வேண்டும். |
| (உ) | சேதன உர உற்பத்திக்காக திகம்பதஹ கழிவு முகாமைத்துவு நிலையத்தில் கட்டப்பட்ட இணை கட்டிடத்திற்காக வாங்கப்பட்ட 2021 ஆம் ஆண்டில் ரூபா 9,377,100 பெறுமதியான மொத்தம் 808 அமானோ தகடுகளும், 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 650,610 பெறுமதியான மழைநீர் பீலிகள் இருப்பு மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் தொடர்புடைய கட்டிடத்தின் கூரை வேயப்படாமல் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் மைதானத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. | திகம்பதஹ வேலைத் தளத்தில் ஏனைய அபிவிருத்தி திட்டங்களுக்கு தொடர்புடைய பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் தொடர்புடைய தேவை மற்றும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | 2021 ஆம் ஆண்டில் ரூபா. 443,225 செலவில் நிறுவப்பட்ட வீத வரி அறவிட்டு மென்பொருள் முறைமை பயன்படுத்தப்படவில்லை. | நி.பி 104 (3) இன் கீழ் பரிசோதனைக் குழுவால் ஆரம்ப பரிசோதனை நடத்தப் படுவதாக மின் வேலி பழுதுபார்க்கப்பட்ட பிறகு குழாய் கிணறு பயன்பாட்டுக்கு வரும். தொடர்புடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு சொத்துக்களை திறமையாகப் பயன்படுத்த வேண்டும். | வீதவரி மதிப்பீட்டு மென்பொருள் முறைமையை விரைவில் பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். |
| (எ) | திகம்பதஹ கழிவு முகாமைத்துவ நிலையத்தில் குழாய் கிணறு அமைப்பதற்கு முன்னர் மணிக்கு 3000 லீட்டர் நீர் கொள்ளளவைக் கொண்ட ரூபா 450,070 பெறுமதியான நீர் மோட்டரொன்றும் மோட்டார் கட்டுப்பாட்டு பனலும் கொள்வனவு செய்யப்பட்டு விளைவற்று காணப்பட்டன. | மின் வேலி பழுதுபார்க்கப்பட்ட பிறகு குழாய் கிணற்றை பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | தொடர்புடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு சொத்துக்களை செயற்திறனாகப் பயன்படுத்த வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்தும் 18 காணிகள் மற்றும் 06 வாகனங்களின் உரித்து சபையின் பெயரில் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக. | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கையை உள்ளவாறான பதவியணி எண்ணிக்கையுடன் ஒப்பிடும் பொழுது சிரேஷ்ட மட்டத்தில் 04 பதவிகளும் மூன்றாம் மட்டத்தில் 03 பதவிகளும் 34 ஆரம்ப மட்ட பதவிகள் உட்பட 41 பதவிகளில் வெற்றிடங்களும் 34 பதவிகளில் மிகையும் காணப்பட்டன. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | மாநகர சபையில் உள்ள வெற்றிடங்களை நிரப்பாமல், 01 முதல் 11 ஆண்டுகள் வரை 35 வெளிக்கள ஊழியர்கள் தமது உரிய கடமைகள் அல்லாத அலுவலக அடிப்படையிலான விடயங்களில் இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களை நிரப்பிய பிறகு அவர்களை வழக்கமான பதவிகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக | பணியாளர்களை வழக்கமான உரிய பதவிகளில் ஈடுபடுத்த வேண்டும். |
| (இ) | மாநாகர சபை மூலம் நிர்வகிக்கப்படும் முன்பள்ளி பாடசாலையொன்று இல்லாதிருக்கும் போதும் பாடசலையைத் ஆரம்பிப்பதற்கு முன் தயாரிப்பு இல்லாமல் முன்பள்ளி காப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு அவருக்காக 2019 செப்டம்பர் 16 ஆந் திகதி முதல் சம்பளம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர் நூலக உதவியாளராக தனது கடமைகளைச் செய்வதற்காக 2024 ஆம் ஆண்டிற்கான சம்பளமாக அந்த உத்தியோகத்தருக்கு ரூபா 621,480 வழங்கப்பட்டிருந்தது. | விரைவில் ஒரு முன்பள்ளி நிர்மாணிக்கப்பட்டு, தொடர்புடைய பதவியில் ஈடுபடுத்துவதாக. | தேவைக்கேற்ற வகையில் மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |